கோவைக்கு வருகை தந்த முதலமைச்சர்:

அரைகுறையாக குண்டும் குழியுமாக போடப்பட்ட சாலை!

பொறுப்பு அமைச்சருக்கு மக்கள் கேள்வி!

கோவை, அக்.18-

கோவைக்கு முதலமைச்சர் வருகைக்காக அரை குறையாக ரோடு போடப்பட்டு இருப்பதாகவும், ஒரு பக்கம் ஜொலிக்குது, மறுபக்கம் குண்டும் குழியுமா இருப்பதாகவும் பொறுப்பு அமைச்சருக்கு மக்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

கோவை காந்திபுரத்தில் கழகத் தலைவர் எந்நாளும் எங்கள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் இதில் கட்டுமானப் பணிக்கு ரூ.245 கோடியும், புத்தகங்கள் வாங்க ரூ.50 கோடியும், இபுத்தகங்களுக்கு ரூ.5 கோடியும் ஒதுக்கீடு செய்து 6.98 ஏக்கர் பரப்பில் 1.98 லட்சம் சதுர அடி பரப்பளவில் 1.25 லட்சத்திற்கும் அதிகமான புத்தகங்களுடனும், 181 கார்கள் மற்றும் 451 இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான விசாலமான பார்க்கிங் வசதிகளுடனும் கோவையின் மையப் பகுதியான காந்திபுரம் பேருந்து நிலையம் அருகில் (பழைய மத்திய சிறைச் சாலை வளாகம்) அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது விளைவாக பெரியார் அறிவுலகத்தை திறந்து வைப்பதற்காக தமிழக முதல்வர் ஜோசப் விஜய் இன்று கோவைக்கு வருகை தருகிறார். முதல்வரின் வருகையை முன்னிட்டு, அவர் பயணிக்கும் சாலையான கோவை விமான நிலையத் திலிருந்து காந்திபுரம் வரையிலான பிரதான சாலைகள் போர்க்கால அடிப்படையில் சீரமைக் கப்பட்டுள்ளன. ஆனால், முதலமைச்சர் வந்து செல்லும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் சாலைகள் பளிச்சோன்று சீரமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகிலேயே உள்ள மற்றொரு பகுதி கண்டு கொள்ளப்படாமல் விட்டு விடப்பட்டுள்ளது.

அந்தப் பகுதி முழுவதும் குண்டும், குழியுமாக, வாகனங்கள் செல்லும் போது புழுதி பறக்கும் அவல நிலையில் காட்சி அளிக்கிறது. தினசரி இந்தப் பாதையைப் பயன்படுத்தும் வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். முதல்வர் வந்து செல்லும் வழியில் மட்டும் ” கண் துடிப்புக்கு “ சாலைகளைப் போட்டுவிட்டு மக்கள் தினமும் சந்திக்கும் அவதியை மறைக்கப் பார்க்கிறார்கள் என்று பொதுமக்கள், கோவையின் பொறுப்பு அமைச்சர் சம்பத் குமாருக்கு கேள்வி எழுப்பி உள்ளனர். முதல்வரின் கண்ணில் மண்ணைத் தூவி ஏமாற்றும் வேலையைத் தான் அதிகாரிகள் செய்கிறார்கள், மக்கள் பயன்பாட்டில் உள்ள அனைத்துச் சாலைகளையும் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

த.வெ.க. அரசின் வெற்றிப்பயணம் பயணிகளின் நடைபயணமாக மாறியது!



அரியலூர்,அக், 18-

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் கும்பகோணம் செல்லக்கூடிய தமிழக அரசின் வெற்றிப் பயண பேருந்து கும்பகோணத்திலிருந்து கல்லூரி பள்ளி மாணவர்கள் என பயணிகளுடன் ஜெயங்கொண்டம் நோக்கி வந்து கொண்டிருந்த பொழுது தா.பழூர் பேருந்து நிறுத்தத்தை தாண்டி சிறிது தூரத்தில் பேருந்து டயர் பஞ்சர் எனக் கூறி பேருந்தில் பயணித்த பயணிகளை பேருந்தில் இருந்து கீழே இறக்கி விட்டனர் ஓட்டுனரும்,நடத்துனரும்.

இந்த பேருந்து வெற்றிப் பயண பேருந்து என்பதால் பெண்களுக்கு பயண சீட்டு வழங்கப்படவில்லை என பயணிகள் கூறுகின்றனர். இந்த நிலையில் பேருந்தில் இறக்கிவிடப்பட்டவர்களை மாற்றுப் பேருந்தில் ஜெயங்கொண்டம் செல்ல அனுப்பி வைக்காமல். பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் முதியவர்கள் என அனைவரையும் பாதி வழியில் இறக்கி விட்டுவிட்டு நீங்கள் என்ன பணம் கொடுத்தா வந்தீர்கள் உங்களை மாற்று வண்டியில் ஏற்றிவிட்டு செல்ல என கூறி பஞ்சர் என சொன்ன பேருந்தை செயங்கொண்டம் எடுத்து சென்றனர். பஞ்சர் ஆன பேருந்தை எப்படி செயங்கொண்டம் வரையில் எடுத்து செல்லமுடியும் என பயணிகள் பொதுமக்கள் கேட்கின்றனர்.

ஓட்டுனர் மற்றும் நடத்துனர் பயணிகளிடம் சத்தம் போட்டுவிட்டு பேருந்தை எடுத்துக் கொண்டு ஜெயங்கொண்டம் சென்று விட்டதாக கூறுகின்றனர்.

பயணிகள் மிகவும் சிரமத்துடன் ஒரு கிலோ மீட்டர் நடந்தே பழூரை நோக்கி வந்தனர்.

பிறகு அரை மணிநேரம் காத்திருந்து அங்கு வந்த வேறு பேருந்தில் ஏறி மீண்டும் செயங்கொண்டம் சென்றனர்.

பெண்களுக்கு இலவச பயணம் என்பதால் பாதி வழியில் இறக்கி விட்டு மாற்று பேருந்து ஏற்படுத்தாமல் நடத்துனர் ஓட்டுனர் சென்றுள்ளனர். இதுவே பணம் கொடுத்து பயணித்திருந்தால் பாதி வழியில் விட்டுச் சென்ற ஓட்டுனர் நடத்தினர் பொது மக்கள் ஆகிய எங்களை மாற்று பேருந்தில் ஏற்றி அனுப்பாமல் சென்று இருப்பார்களா? வெற்றிப் பயணம் என்று சொல்லி எங்களை பாதி வழில் இறக்கிவிட்டு சென்றுவிட்டார்கள் இதுதான் தவெக அரசின் மாற்றமா?

மாற்றம் வேண்டும் என்று வாக்களித்த எங்களை நடுரோட்டில் இறக்கி விட்டு சென்றதுதான் தவெகவின் மாற்றமா என பயணிகள் கேட்கின்றனர்.

பூந்தமல்லியில் மழைநீர் தேங்கும் பகுதிகளில் ஆய்வு!

தி.மு.க. நகரமன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் மேற்கொண்டார்!

திருவள்ளூர், அக். 18–

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி நகராட்சிக்குட்பட்ட 8 முதல் 15ஆவது வார்டு வரையுள்ள 8 வார்டுகளில் மழை நீர் தேங்கி பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

இதனால் அப்பகுதிகளுக்கு சிறப்பு சுவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பது குறித்து பூவிருந்தவல்லி நகர்மன்றத் தலைவர் காஞ்சனா சுதாகர், நகராட்சி அதிகாரிகள் பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

முன்னதாக, அம்பேத்கர் நகர், அம்மான் நகர், பெரியார் நகர், லட்சுமி நகர், சீனிவாசா நகர், நண்பர்கள் நகர், சாய்நகர், லட்சுமிபுரம் சாலை, மலையம்பாக்கம் சாலை, பைபாஸ் சாலை, அணுகுச் சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த காலங்களில் மழை நீர் தேங்கி பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

அதனைக் கருத்தில் கொண்டு வரும் பருவமழை காலத்தில் பாதிப்பு ஏற்படாத வகையில் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

பல்வேறு ஊராட்சிகளில் இருந்து அதிக அளவில் மழைநீர் வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்டச் சாலையை கடந்து மாங்காடு நகராட்சிக்கு வந்ததால், அங்கு அதிக அளவில் பாதிப்பு ஏற்ப்பட்டது.

மாங்காட்டில் வெள்ளப் பாதிப்பை தடுக்க வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்டச் சாலையில், சாலையோரம் வழியாக சிக்கராயபுரம் கல்குவாரிக்கு செல்லும் வகையில், கால்வாய் 2022ஆம் ஆண்டு டிசம்பரில் அமைக்கப்பட்டது. கால்வாயை தூர்வாரி மழை நீரை கல்குவாரிக்கு கொண்டு செல்வதற்கு நெடுஞ்சாலைத் துறை மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட நிர்வாகங்கள் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுப்பது குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கழக ”முப்பெரும் விழா பொதுக்கூட்டம் முன்னாள் அமைச்சர்– மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட அவை தலைவர் ஜி.கே.சுபாசு, பொருளாளர் கார்த்திகேயன், தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், கு.சீ.வே.தாமரை கண்ணன, கருங்கல்பட்டி பகுதி கழக செயலாளர் ஏ.எஸ்.சரவணன், மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் ,கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ஆலோசகர்கள் நியமனம் – பொறுப்பாளர்கள் தேர்வு அரசாணை எங்கே?

தகவல் சரிபார்ப்பகம் பற்றிய தகவல்களை உடனே வெளியிடுக!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, அக்.18–

தகவல் சரிபார்ப்பகம் பற்றிய தக வல்களை டம்மி அரசு உடனே வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

தகவல் சரிபார்ப்பகம் குறித்த தக வல்கள், தகவல் உரிமை சட்டத்தின் கீழ் வழங்கப்படாது என்று இந்த டம்மி அரசு பம்மி நிற்பதை வன்மை யாகக் கண்டிக்கிறேன்.

பொய்ச்செய்திகளுக்கு எதிராக போரிட, கழக ஆட்சியின் போது தக வல் சரிபார்ப்பு தொடர்பான சர்வதேச அளவிலான நிறுவனங்களில் பங்களிப்புச் செய்த அனுபவம் கொண்டவர் களைக் கொண்டு TN Fact Check Unit தொடங்கப்பட்டது.

அதனை இன்றைய சர்க்கஸ் சர்க்கார், Virtual Abusers கும்பலைக் கொண்டு Information Integrity Desk என்று மாற்றி இருக்கிறது.



இதற்காக வெளியிடப்பட்ட அரசாணை எங்கே? இதில் யார் யாரெல்லாம் பொறுப்பில் உள்ளார்கள்? என்னென்ன பணிகளை செய்கிறார்கள்? இதற்கான நிதி ஒதுக்கீடு என்ன? என்ற கேள்விகளை எல்லாம் RTI மூலம் ஜீவிதா என்பவர் கேட்டுள்ளார்.

ஆனால், அவர் RTI மூலம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூற முடியாது என்று இந்த அரசு கடிதம் கொடுத்துள்ளது.

Transparent Governanceஐ தருவேன் என்று வாயால் வடை சுட்ட முதலமைச்சர், தன்னுடைய Advisors நியமனம் முதல், தகவல் சரிபார்ப்பக பொறுப்பாளர்கள் தேர்வு வரை எல்லா GOவையும் ஒளித்து வைப்பது ஏன்?

ரசிகர்கள் என்ற போர்வையில் பொய்களைப் பரப்பி ஆபாச தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த தகுதியற்ற இணையக் கூலிப்படைக்கு அந்தப்பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது அம்பலமாகிவிடும் என்பதாலா?

உண்மை எது பொய் எது என்று சொல்லும் தகவல் சரிபார்ப்பகம் பற்றிய தகவல்களே மக்களுக்குத் தெரியாமல் இருப்பது நல்லதல்ல.

உண்மையை நீண்ட நாள் பொத்தி வைக்க முடியாது என்பதை உணர்ந்து இந்த Dummy அரசு தகவல் சரிபார்ப்பகம் பற்றிய தகவல்களை உடனடியாக வெளியிட வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில்

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை

இடைச்செருகல் செய்து அரசியலுக்காக அவசரக்கதியில் நடத்தும் நிலை!

திருப்பூர், அக்.18-

பள்ளிக்கல்வித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் வழக்கமாக நடத்தப்படும் போட்டிகளை முறையாக நடத்துவதற்கு முன்பாகவே,ம் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த ரூ.5 கோடி பரிசு என அறிவித்து முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை இடைச்செருகல் செய்து அரசியலுக்காக அவசரக்கதியில் நடத்தும் நிலை மாற வேண்டும். போட்டிகள் நடந்த மைதானமும் இல்லை, ஆசிரியரும் இல்லை, கட்டமைப்பில் பெரும் சவால்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் இளைஞர்கள் மாணவர்கள் இடையே விளையாட்டு திறனை ஊக்கப்படுத்தும் வகையில் அடுத்தடுத்து பல அதிரடி அறிவிப்புகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டு வந்தாலும் தற்போதைய சூழலில் அதற்கான போதிய அடிப்படை கட்டமைப்புகள் இல்லாததே மிகப்பெரிய சவாலாக உள்ளதாக உடற்கல்வி ஆசிரியர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் இடையே விளையாட்டு ஆர்வத்தை ஊக்கப்படுத்தவும். அவர்களின் திறமைகளை வெளிக்கொணரவும் அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, பள்ளிகளில் வாரத்தின் ஐந்து நாட்களும் உடற்கல்விக்கு ஒரு பாட வேளை ஒதுக்கப்படும் என்ற அறிவிப்பும், ஒலிம்பிக் உள்ளிட்ட சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று திரும்பும் வீரர்களுக்கு ஐந்து கோடி ரூபாய் வரை பரிசுத் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பும் கிராமப்புற மற்றும் ஏழை, எளிய மாணவர்களின் விளையாட்டுக் கனவுகளுக்கு மிகப்பெரிய நம்பிக்கையை அளித்துள்ளன. ஆனால், களத்தில் உள்ள குறைபாடுகளை சரி செய்யாமல் அரசு இத்தகைய அறிவிப்புகளை வெளியிடுவது வெறும் கவர்ச்சி கரமானதாக இருக்குமே தவிர, நடைமுறையில் பலனளிக்காது எனப்பலரும் தெரிவிக்கின்றனர்.

திருப்பூர் மாவட்டம் மட்டுமன்றி தமிழ்நாடு முழுவதும் ஏராளமான அரசு பள்ளிகளில் பயிற்சி மேற்கொள்வதற்கான மைதான வசதிகளே இல்லாத நிலை நீடிக்கிறது. ஏற்கெனவே வாரத்திற்கு இரண்டு நாட்கள் உடற்கல்வி பாடவேளை இருந்த போதே, போதிய மைதான வசதியும், ஆசிரியர்களும் இல்லாத சூழலே நிலவியது. வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டுமே பகுதி நேர உடற்கல்வி ஆசிரியர்கள் பணியாற்றி வரும் நிலையில், தற்போது வாரத்தின் ஐந்து நாட்களும் உடற்கல்வி பாட வேளை கொண்டுவரப்பட்டால் மாணவர்களுக்கு யார் பயிற்சி அளிப்பார்கள் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதேபோல் கழகத் தலைவர், எந்நாளும் எங்கள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கடந்த திராவிட மாடல் ஆட்சியின் போது கழக இளைஞர் அணி செயலாளர், அன்றைய விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், இன்றைய தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு மினி விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், தற்போது பல்வேறு பகுதிகளிலும் புதிதாகப் பொறுப்பேற்ற தவெக அரசால் கால்ப்புணர்ச்சியின் காரணமாக அந்தத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் பள்ளி மாணவ, மாணவிகள் மட்டுமன்றி விளையாட்டு ஆர்வலர்களும் முறையான பயிற்சி பெறமுடியாத சூழல் உருவாகியுள்ளது. இதன் காரணமாகவே அரசின் இந்த அறிவிப்புகள் அமலாவதும் அதன் மூலம் விளையாட்டுத்துறை வளர்ச்சியடையும் என்பதும் சந்தேகத் திற்குரியதாக இருப்பதாக விளையாட்டு ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து திருப்பூரை சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர் கூறுகையில், பள்ளிக் கல்வித்துறை மற்றும் விளையாட்டுத்துறை சார்பிலான அறிவிப்புகள் வரவேற்க கூடியவை தான். ஆனால், அதற்கான கட்டமைப்பையும் முதலில் உருவாக்க வேண்டும். தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக உருவாக்க வேண்டும். உடற்கல்விப் பாடத்தைக் கட்டாயமாக்கி, ஆறாவது பாடமாகச் சேர்ப்பதோடு, அதற்குரிய பாடநூல்களையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும். மேலும், அரசு பள்ளிகளில் குறைந்தபட்ச பயிற்சிகளுக்கான விளையாட்டு மைதானங்களை அமைத்துத் தருவது அவசியமாகும். விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான செல்வினத் தொகையை உயர்த்திக் கொடுப்பதோடு, போட்டிகளுக்கான கால அட்டவணையைச் சரியாகத் திட்டமிட்டு அமைக்க வேண்டும். மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளை அந்தந்தக் குறுவட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் தொடர்ச்சியாக நடத்த வேண்டும். அதை விட்டு விட்டு பள்ளிக்கல்வித் துறைமற்றும்விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் வழக்கமாக நடத்தப்படும் போட்டிகளை முறையாக நடத்துவதற்கு முன்பாகவே, முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை இடைச்சொருகல் செய்து அரசியலுக்காக அவசரக்கதியில் நடத்தும் நிலை மாற வேண்டும்.

களஅளவிலான இத்தகைய அடிப்படை மாற்றங்களைச் செய்யாதவரை, அரசின் கனவு ஒலிம்பிக் திட்டம் வெறும் கனவாக மட்டுமே எஞ்சியிருக்கும். அரசின் உயரிய இலக்குகள் வெற்றிபெற வேண்டுமானால், கிராமப்புற மற்றும் நகர்ப்புற பள்ளிகளில் அடிமட்ட அளவில் விளையாட்டுக்கான கட்டமைப்பு வசதிகள் உடனடியாக மேம்படுத்தப்பட வேண்டும். போதிய உடற்கல்வி ஆசிரியர்களின் நியமனமும் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே அரசின் அறிவிப்புகள் களத்தில் முழுவதுமாய் செயல்பாட்டுக்கு வருவதோடு, தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழும் என்கிறார்.

‘பெரியார் அறிவுலகம்’ போல திராவிட மாடல் அரசின் திட்டங்கள் ஏராளமாக இருக்கிறது! அதற்கு

ஸ்டிக்கர் மட்டும் ஒட்டாமல் புதிய திட்டங்களையும் த.வெ.க. அரசு உருவாக்க வேண்டும்!

தி.மு.க. ஐ.டி.விங் வலியுறுத்தல்!

சென்னை, அக்.18-

தி.மு.கழக ஐ.டி.விங் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

அறிவில் சிறந்த சமூகமாக தமிழ்ச் சமூகம் உருவாக வேண்டும். அதற்கான அறிவுப்புரட்சியை ஏற்படுத்த நம் முடைய மண்ணில் தோன்றியதுதான், திராவிட இயக்கம்!

அதற்காக நம்முடைய கழக அரசு செய்த பணிகள் ஏராளம்; அதில் மணிமகுடமாய் அமைந்ததுதான் திராவிட மாடல் அரசின் பணிகள் எல்லாம்.. அதில் ஒன்றுதான் பெரியாரை போலவே கம்பீரமாய் உருவாக்கப்பட்ட பெரியார் அறிவுலகம்.

06.11.2024 அன்று திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களால், ரூ.300 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டது பெரியார் அறிவுலகம் மற்றும் அறிவியல் மையம்.

கடந்த பிப்ரவரி மாதம் இறுதிக் கட்டப் பணிகளை திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்த நிலையில், இன்று த.வெ.க. அரசால் திறப்பு விழா நடைபெற்றுள்ளது.

இதனை காணும்போது, வள்ளுவர் கோட்டம் திறப்பு விழாவில், “சரித்திரத்தில் நமக்குக் கிடைக்கிற இடம், சலுகையால் பெறக்கூடியது அல்ல! எது நேர்ந்தாலும், என்ன நேர்ந்தாலும் மறைக்க முடியாத இடம்! அந்த நம்பிக்கையுடன்தான் இன்று நடக்கும் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன்” என எழுதினார் தலைவர் கலைஞர்.

அதேபோலத்தான் நமக்குப் பெரியார் அறிவுலகமும்.

தி.மு.க. அரசு என்ன செய்தது எனக் கேட்கும் “டெல்லியின் அடிமை முதலமைச்சர்” கடந்த சில நாட்களில் அறிந்திருப்பார் தி.மு.க. என்னென்ன செய்திருக்கிறது என்று இது போல திறப்பு விழா காண்பதற்கு திராவிட மாடல் அரசின் பல்வேறு திட்டங்கள் இன்னமும் இருக்கிறது. அதற்கு ஸ்டிக்கர் மட்டும் ஒட்டாமல் புதிதாக திட்டங்களையும் இந்த அரசு உருவாக்க வேண்டும்.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.